
# தமிழ்ச்சிட்டு





# உங்கள் மடல்கள்

O மாணுக்கர்களைத் தூய தமிழில் எழுதும்படி தூண்டும் வண்ணம் இவ்வேடு அமைந்துள்ளது. அவர்களுக்குவேண்டிய அறவுரையும் அறிவுரையும் நிரம்பிய ஏடாகவும் உள்ளது. சிறுவர்களுக்கு என்று வெளியிடப்பெறும் நூல்கள் பலவற்றுள் 'தமிழ்ச்சிட்டு' ஏடே நன்முறையில் மாணுக்கர்களும் பிறரும் பயனடையும் வண்ணம் அமைந்துள்ளது. இவ்வேடு மேலும் மேலும் வளமோடு ஓங்க இறைவன் அருளை வேண்டுகின்றேன்.

தி. வேங்கடராமன். (பி. ஏ. பி.டி.) சேலம்-9.

O தாங்கள் வெளியிடும் தனித்தமிழ் இதழ்களான 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' இரண்டும் கல்லூரி உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளிடம் சென்று, அவர்களைத் தனித்தமிழில் பேசவும் எழுதவும் உணர்வூட்டுகின்றதை அறிகின்றேன். பிற்காலத்தில் தமிழ்நாடு தனியாகப் பிரியவும், இந்தியை ஒழித்து, வடமொழி ஆங்கிலங்களை அகற்றித் தமிழ்மொழி தூய்மையுறவும் உங்கள் இதழ்கள் துணைபுரியும் என்று உறுதியாக நம்புகின்றேன்,

மா. தாமரைக்கண்ணன். க. க. கல்லூரி. வேலூர் (சேலம்)

O தமிழைத் தன் உயிரெனக் கருதும் என் அருமை அண்ணன் வாயிலாகத் தமிழ்ச்சிட்டைக் கற்கின்ற பேறுபெற்றேன். பசுந் தேனும் இனித்திடும் பைந்தமிழின் சிறப்பை, ஆயிரமாயிரம் வெள்ளை உள்ளங்களைக் கொண்ட என்போன்ற இளம் நெஞ்சங்களில் ஒளிரவைத்துத் தனித்தமிழின் அருமையை விளக்கிடும் அரிய தொண்டினைக் கண்டு உளமார வணங்குகின்றேன்.

சா. மலர்ச்செல்வி, சீமோன்தெரு. பொறையாறு, மயிலாடுதுறை.

O இயற்கையால் அமைக்கப்பட்ட சிப்பியில் அடங்கிக் கடலின் அடியில் வீழ்ந்து கிடக்கும் முத்தைப் போல, அறியாமை என்னும் சேற்றின் அடியில் வீழ்ந்து கிடக்கும் எங்கள் இளம் உள்ளங்களை ஒளிமுத்தாய், குமுகாய விளக்காய், அறிவுக் கனியாய் மாற்ற தமிழ்ச்சிட்டை அழைப்போம், எங்கள்பள்ளிக்கே.

அ. சங்கரவேணி. பத்தாம்நிலை. தொண்டுநிலையம்,பெங்களூர்-21.

O தமிழ்ச்சிட்டின் எழுத்தொளியே மாணுக்கரின் அறிவொளியாகும். சிட்டு எடுத்திசைக்கும் தனித்தமிழ் இசையொலியே உறங்கிக் கொண்டிருக்கும் இளம் உள்ளங்களைத் தட்டியெழுப்பும் குரலொலியாகும். பிஞ்சு உள்ளங்களின் கருவூலம் தமிழ்ச்சிட்டு;

வி. நாகராசன். புதுச்சேரி-4.



# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்–1 | தி. பி. ௧௯௯௭. மார்கழி (திசம்பர்) | இசை–5

## பிழைக்கு அஞ்சுங்கள்!

குழந்தைகளே! இப்பொழுதெல்லாம் கடைகளில் விற்கும் செய்தித் தாள்களையோ, குழந்தைகளுக்காக வெளிவரும் கதைப் பொத்தகங் களையோ வாங்கிப் படிப்பபதற்குப் பழகிக் கொண்டிருக்கின்றீர்கள். இல்லையா? அவற்றில் பெரும்பாலும் நூற்றுக்குப் பத்து இலக்கணப் பிழைகளும் இருபது பிறமொழிக் கலவையும், பத்து தவறான சொற்க ளும் இருக்கக் காண்பீர்கள். அவற்றை இப்படியே படிக்கப் பழகி விட்டீர்களானால் பிறகு நீங்கள் பிழையற்ற உயர்ந்த நூல்களைப் பார்த் தாலும் அவற்றில் விருப்பம் கொள்ள மாட்டீர்கள். காதுகளுக்கும், நாக்குக்கும் அப்பிழையான சொல்வடிவங்களே பழகிப் போவதால் அவையே சரி போலவும், சரியானவையே பிழைபோலவும் உங்களுக்

பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்:– இறைக்குருவன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1.

குப்படும். ஒருமுறை திருடிப் பழகி விட்டவன், மீண்டும் மீண்டும் திருடுவதையும், ஒருமுறை கள் குடித்தவன் மீண்டும் மீண்டும் அதைக் குடித்துக் கெட்டுப் போவதையும் பார்த்திருப்பீர்கள் இல்லையா? அத் திருடன் திருட்டுத் தனத்தைப் பற்றிக் கவலை கொள்கின்றானா? அக் குடியன் தான் குடிகெட்டுப்போவதைப் பற்றிக் கவலைப் படுகின்றானா? இல்லையே! அதுபோலவே பிழையாகப் படித்துப் பழகியவனும் பிழையாக எழுதிப் பழகுபவனும் எவர் சொன்னாலும் திருந்துவதே இல்லை. அவன் அதைப் பற்றிக் கவலைப்படுவதும் இல்லை; வெட்கப்படுவதும் இல்லை.

இன்னும், அப்படிப் பிழையாக எழுதியோ பேசியோ பழகிக் கொண்டவன், அவ்வாறு எழுதுவதனாலும் பேசுவதனாலும் ஏதாவது வருமானத்தைப் பெறத் தொடங்கி விட்டானானால், அவன் துணிவு கொண்டவனாகத் தான் எழுதுவதே சரியென்றும், பேசுவதே மொழியென்றும் சண்டைக்கு வருவான். அவன் அரசனானால் பிறரையும் அப்படியே பேசச் சொல்லியும் எழுதச் சொல்லியும் சட்டமும் போடுவான். குடியன் அரசன் ஆனால் குடிப்பதைத் தடுப்பானோ? ஆகவே அத்தகையவர்களைப்பற்றியெல்லாம் நீங்கள் கவலைப்படாமல், அறிவைத் தெரிந்து கொள்வதில் அக்கறையோடு இருங்கள். நீங்கள் அதைப்பற்றித் அக்கறைப்படாமல் போனால் பிழையாகவே கற்பீர்கள்; பிழையாகவே பேசுவீர்கள்; பிழையாகவே எழுதுவீர்கள். பிறகு பிழையாகவே நடக்கத் தொடங்கி விடுவீர்கள்.

இப்பொழுதெல்லாம் அச்சாகி வருகின்ற நூல்களும், தாளிகை (பத்திரிகை)களும் பெரும்பாலும் பிழைகள்வாய்ந்தனவாகவே இருக்கக் கண்டு, நம் தமிழ்மொழிக்கு வந்த இழிவை எண்ணி வருந்த வேண்டி உள்ளது. போதும் போதாமைக்குத் திரைப்படங்கள் வேறு! நம் மக்களுக்கோ இன்னும் எதிலும் அறிவு நாட்டம் ஏற்படவில்லை! அதைப் பற்றியெல்லாம் கவலைப்பட ஆட்களும் இல்லை. எழுதுகோல் எடுத்தவன் எல்லாம் எழுத்தாளன் ஆகிவிடுகின்றான். கலையைப்பற்றி முற்றும் கல்லாதவனெல்லாம் கலைஞன் ஆகி விடுகின்றான். தமிழ் தெரியாதவனெல்லாம் தமிழ்க் காவலன், தமிழவேள் ஆகிவிடுகின்றான்.

இவர்கள் எல்லாரும் சேர்ந்து தமிழ்மொழியைக் கெடுத்துக் குட்டிச்சுவ ராக்கிக் கொண்டு வருகின்றனரே அல்லாமல் உருப்படியாகப் ஒரு நூலும் - எழுதுவதில்லை; ஒரு பேச்சும் பேசுவதில்லை.

அரசாட்சியில் இருப்பவர்களுக்கும் தமிழ்மொழி வளரவேண்டும். தமிழ் மக்கள் அறிவு பெறவேண்டும்; பண்புள்ளவர்களாக ஆக வேண்டும் என்பதில் துளியும் கவலை இல்லை. எல்லாருக்கும் ஒரே குறிக்கோள். அதுதான் பணம். எப்படியாவது பிறரிடம் அடித் துப் பிடுங்கியாவது - முடியாமற்போனால் திருடியாவது - அதுவும் முடியாமல் போனால் ஏமாற்றியாவது பணத்தைக் குவிக்கவே விரும்பு கின்றனர். இத்தகைய கீழ்மைச் செயலால் மக்களிடையே ஒழுக்கம் கெட்டுப் போகின்றது: பண்பாடு தாழ்ந்து போகின்றது. மக்கள் விலங்குகளாக மாறுகின்றனர்.

பணம் நமக்கு வினைபடு கருவியே! அஃதாவது நாம் விரும்பிய முயற்சிகளுக்கு-வேலைகளுக்குத் துணையாக இருப்பதே! நாம் வழி படும் கருவியன்று. அஃதாவது நாம் அதை விரும்பித் தேடிச் சேர்த்து வைத்துக் கொள்ளத் தகுந்த கருவி அன்று! நாம் தேடவேண்டிய செல்வம் கல்விதான். கல்வி பெற்றவர்களின் விட்டை-அறிவு ஊக்கம் உடையவர்கள் விட்டைப் பணம் தேடிக்கொண்டு வரும் என்று வள்ளு வர் சொல்கின்றார்.

அத்தகைய கல்விக்கு அடிப்படை மொழியே. அந்த மொழியை நாம் செப்பமுடன் பேச வேண்டாவா? செப்பமுடன் எழுத வேண் டாவா? இதுபற்றி இன்னும் நிறையத் தெரிந்துகொள்ள வேண்டாவா? எனவே தொடக்கத்தில் இருந்து நீங்கள் விழிப்புடன் இருங்கள். பிழை களைக் களைந்து எறிவதில் துணிவும், ஊக்கமும் உடையவர்களாக இருங்கள், நீங்கள் என்றும் பிழைக்கு அஞ்ச வேண்டும். பிழைக்கு அஞ்சாதவன் பேதை; அறிவிலி; ஏமாற்றுபவன்; திருடன்; சோம் பேறி; கயவன். அவனால் உலகத்துக்கே தீங்கு.

---

# உலகம் சுற்றுவோம்

## குற்றங்களில் முன்னேற்றம்.

தமிழகத்தில் 1965ஆம் ஆண்டு ஊர்காவல் துறையினர் கணக்குப்படி 18,417 குற்றங்கள் நடந்தன. ஆனால், இவ்வாண்டு 21,287 குற்றங்கள் நடந்துள்ளன. நாட்டில் குற்றவாளிகள் பெருகி வருவதையே இவ்வுயர்வு காட்டுகின்றது.

## தீப்பற்றாத வண்ணப்பூச்சு.


பம்பாயில் உள்ள வெளிநாட்டு வாணிக நிலையம் ஒன்றில் ஒரு வகையான நெய்வணம் (Paint) அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ் வண்ணப்பூச்சை மரம், மூங்கில் முதலியவற்றின்மேல் பூசுவதால் அவை தீப்பிடித்து எரிந்து போகாவாம். ஓரிரண்டு ஆண்டுகளுக்குள் இப்பூச்சு எங்கும் விற்பனைக்குக் கிடைக்குமாம்.

## பொத்தகத் திருடர்கள்

பெரும்பாலான நூலகங்களில் வந்து படிப்பவர்கள் சிலர் அங்குள்ள பொத்தகங்களைத் திருடிக்கொண்டு போய் விடுகின்றார்கள். இல்லையா? இத்தகைய பொத்தகத் திருடர்களைக் கண்டுபிடிக்க இலண்டனில் மின்னணுப்பொறியின் உதவியால் ஒருவழி கண்டு பிடித்திருக்கின்றனர். நூலகங்களிலிருந்து வெளியே வருவதற்குத் தனியாக ஒரு கண்காணிப்புப் பாதை அமைத்திருக்கின்றனர். நூலகங்களில் உள்ள அத்தனைப் பொத்தகங்களிலும் ஒவ்வொரு சிறிய மின்னணுத் தகட்டை ஒட்டியுள்ளனர். அப்படிப்பட்ட பொத்தகத்தை எடுத்துக் கொண்டு. கண்காணிப்புப் பாதை வழியாக வரும் ஆட்களை ஒரு மின்சார மணி எளிதில் காட்டிக் கொடுத்துவிடுகின்றது. இம்முறையால் அங்குள்ள நூலகங்களில் இப்பொழுதெல்லாம் பொத்தகங்கள் திருட்டுப் போவதில்லையாம்.

## நூறு ஆண்டுப் புதிர்க் கணக்கு

பிரெஞ்சு நாட்டின் புகழ் பெற்ற கணக்கியல் அறிஞரான உலூயிசு என்பார் நூறு ஆண்டுகளுக்கு முன் மிகவும் சிக்கல் வாய்ந்த ஒரு கணக்குக்கு விடை கண்டுபிடிக்கும்படி அறிஞர்களைக் கேட்டார். அந்தக் கணக்குக்கு விடை கண்டுபிடிக்கக் கடந்த நூறு ஆண்டுகளாக அறிஞர் பலர் முயற்சி செய்தும் பயன் இல்லை. இறுதியில் திபிலிசியைச் சேர்ந்த 20 ஆண்டு இளைஞர் ஒருவரே அந்தப் புதிருக்கு விடை கண்டு பிடித்தார்.




## 5 எட்டுத்தொகை - நற்றிணை

தமிழ்க் கழகங்களைப் பற்றியும், அவற்றில் இயற்றப் பெற்றுத் தொகுக்கப் பெற்ற நூல்கள் எவை எவை என்பது பற்றியும் முன்னர் ஓரளவு தெரிந்து கொண்டோம். இனி வரும் இதழ்களில் அங்குக் கூறப் பட்ட நூல்களைப்பற்றித் தனித்தனியாக ஒருசில அறிந்துகொள்வோம்.

கழகத்தின் முத்தொகுப்பு நூல்களில் முதலாவதானது எட்டுத் தொகை என்னும் நூல் தொகுப்பு. இத்தொகுப்பில் எட்டு நூல்கள் உள்ளதை அறிவீர்கள். அவ்வெட்டுத் தொகுப்பு நூல்களும் அவ்வ வற்றில் உள்ள பாடல்களின் பா வகையாலும்,பொருள் அமைப்பாலும், அடி அளவுகளாலும் பாகுபாடு செய்யப்பட்டுள்ளன.

எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று நற்றிணை நூலாகும். இதில் நானூறு பாடல்கள் உள. எனவே இதை நற்றிணை நானூறு என்றும் கூறுவர். இதில் உள்ள நானூறு பாடல்களில் 234-ஆம் பாட்டு கிடைக்கவில்லை. அக்காலத்தில் நூல்களை ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்ததால் ஏற்பட்ட விளைவு இது. பிற 399 பாடல்களும் இப் பொழுது உள்ளன. அவற்றிலும் 385 ஆம் பாட்டின் பிற்பகுதி காணப் படவில்லை.

இதில் வரும் பாடல்கள் அடிவகையாகத் தொகுக்கப்பட்ட பாடல் களாகும். ஒன்பது அடிமுதல் பன்னிரண்டு அடிவரையில் உள்ள பாடல்களே இவற்றில் உள. தனித்தனியாக எழுதப்பட்டுச் சிதறிக் கிடந்த இப்பாடல்களை எல்லாம் ஒன்றுகத்தொகுத்து, ஒருமுழு நூலாக தொகுக்கச் சொன்னவன் பன்னுடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்ற ஓர் அரசன். ஆனுல் யாரைக் கொண்டு இந்நூலைத் தொகுக்கச் செய்தான் என்பது விளங்கவில்லை.

இந்நூலில் உள்ள பாடல்களெல்லாம் காதல் பாடல்களே. காதல் பாட்டுகளை அகத்துறைப் பாடல்கள் என்று புலவர்கள் கூறுவர். பாட்டுகள் காதலைப்பற்றியவை என்றாலும், அவை உயர்ந்த உலக ஒழுக்கங்களைப் பற்றியும், வாழ்க்கை முறைகளைப்பற்றியும் கூறுவன வாகும். இவைபற்றி நீங்கள் பெரியவர்கள் ஆனதும் படித்துத் தெரிந்து கொள்வீர்கள்.

இதில் உள்ள பாடல்களைப் பாடிய புலவர்கள் தொகை 192. இவர்கள் எல்லாரும் ஒரே காலத்தவரும் அல்லர்; ஒரே இடத்தவரும் அல்லர். இந்நூலில் உள்ள பாடல்களுள் 56 பாடல்களைப் ~~பாடிய~~ புல வர்களின் பெயர்கள் தெரியவில்லை. இதில் உள்ள பாடல்கள் யாவும் தனிப்பட்ட ஒருசிலரைப் பற்றியும், வள்ளல்களைப்பற்றியும் அக்காலத்தி லிருந்த அரசர்களைப் பற்றியும் பாடப் பட்டவையாகும்.

இதில் உள்ள பாடல்களில் அக்காலத்து மக்களின் நடைமுறை நிகழ்ச்சிகளும், சில அரசியல் முறைகளும் கூறப்பட்டுள்ளன. இமயத் தில் பொன் இருப்பதைப்பற்றி ஒரு பாட்டில் கூறப்பட்டிருக்கின்றது. அக்காலத்தில் அரசன் ஊரில் இராக்காவலர்களை வைத்திருந்தான் என் றும், அவர்கள் இரவில் நாழிகளை அறிவிக்க மணிகளை அடித்து வந்த னர் என்றும் ஒரு பாட்டு கூறுகின்றது. கடற்கரைகளில் கலங்கரை விளக்குகள் இருந்ததைப்பற்றியும், படைமறவர்கள் எல்லாரும் ஒரே வகையான செந்நிற ஆடையை அணிந்திருந்தனர் என்றும், மக்கள் பிணங்களைத் தாழிகளில் வைத்துப் புதைத்தனர் என்றும்; பஞ்சில் இருந்து கொட்டையைப் பிரிக்கப் பெரிய வில்களைப் பயன்படுத்தினர் என்றும்,இரவில் மீன் பிடிக்கப்போகும் செம்படவர் தங்கள் படகுகளில் காற்றில் அணையாத விளக்குகளைப் பயன்படுத்தினர் என்றும், பெண் டிர்க்கு வேண்டிய வளையல்கள் பல வண்ணங்களில் செய்யப் பெற்றன என்றும், இன்னும் பல செய்திகளும் இதில் வரும் பாடல்களில் சொல்லப்பட்டுள்ளன.

இச் செய்திகளே அன்றி இந்நூலைக் கற்றோர் நுண்ணிய தமிழ் அறிவும் இயற்கை இன்பமும் பெறுவர் என்பது உறுதி. மொழிநூல் கல்விக்கும், வாழ்க்கை அறிவிற்கும், பண்பாட்டிற்கும் இத்தகைய உண்மை இலக்கியங்கள் துணைபுரிவனவாகும்,



# பிழையில்லாமல் எழுதுங்கள் பேசுங்கள்

## 5 ஒருமை, பன்மை, திணை

"நான் அப்படிப் பேசுபவன் அல்ல"

"நீங்களும் அப்படிச் செய்பவர்கள் அல்ல"

"பின் அப்படிச் செய்தது எவன்?"

மேலே உள்ள மூன்று தொடர்களையும் கவனியுங்கள். இம் மூன்றும் பிழையான சொல்தொடர்கள்.

முதல் தொடரில் உள்ள பேசுபவன், நான் என்ற சொற்கள் உயர் திணை ஆகையால் அல்ல என்ற வினைமுடிபு சரியன்று 'அல்ல' என்பது அஃறிணை, பன்மை முடிபு. பேசுதல் அவையாக இருந்தால் அல்ல என்ற முடிபு சரி. இங்குப் பேசுதலாகிய தொழிலைச் செய்யும் எழுவாய் உயர்திணையில் இருப்பதால் அல்லன் என்றுதான் வருதல் வேண்டும். "நான் அப்படிப் பேசுபவன் அல்லன்" என்று இருத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் I goes என்றும் He speak என்றும் பேசினால் எப்படிச் சிரிப்பார்களோ - எழுதினால் எப்படிக் கண்டிப்பார்களோ, அப்படி நாம் செய்வதில்லை. காரணம் நமக்கு நம் மொழியின் மேல் அக்கறை இல்லை. நாம் அவ்வாறு அக்கறையில்லாமல் இருக்கும்படி நாம் நம்பும் வழிகாட்டிகள் நம்மைச் செய்து கொண்டு வருகின்றார்கள்.

இதுபோலவே இரண்டாவது தொடரிலும் அல்லர் என்ற உயர் திணைப் பன்மை முடிவே இருத்தல் வேண்டும்.

மூன்றாவது தொடரில் எழுவாயைக் குறிக்கும் செய்தது என்ற சொல் (செய்த + அது) 'அது' என்ற அஃறிணை இறுதியைக் கொண்

டிருப்பதால், வினாவிலும் 'எது' என்ற அஃறிணைச் சொல்லே வருதல் வேண்டும். உயர்திணையானால் செய்தவன் எவன்? என்றோ, செய் தவள் எவள்? என்றோ செய்தவர் எவர்? என்றோதாம் எழுதுதல் வேண்டும்.

இத்தகைய பிழைகளை இன்று எல்லாரும் செய்துகொண்டு வரு கின்றனர். கற்றவர்களும், அறிஞர்களுமாக இருப்பவர்களே இப்படி எழுதியும் பேசியும் வருவதால்தான், பிறரும் அவரைப் பின்பற்றி வரு கின்றனர். அவர்கள்கூட ஆங்கிலத்தில் பேசுகையில் மிக விழிப்பாக இருப்பதில் அக்கறை காட்டியே வருகின்றனர்.

சிறுவர்களாகிய நீங்கள் இப்பொழுதிலிருந்தே திருத்தமாகப் பிழையில்லாமல் பேசவும் எழுதவும் வேண்டும் அன்றோ? O

# எண்ணம், பேச்சு, எழுத்து.

நாம் எதையாவது பேசுவதற்குமுன் எண்ணுகின்றோம். அல்லது பேசாமலிருக்கும் பொழுதும் எதையாவது எண்ணிக் கொண்டே இருக் கின்றோம். நாம் எண்ணும் பொழுது பல வகையான செய்திகளைப் பற்றியும் எண்ணுகின்றோம். பொதுவாக எல்லாரும் அவரவர்களின் தாய்மொழியிலேயே எண்ணுகின்றனர். நம் மனம் சரியாக இருந்து எண்ணங்கள் கோர்வையாக அமையுமானால் அவற்றின் விரைவு ஒரு நிலையான விரைவுடையதாக இருக்கும். மனநிலை சரியில்லாதவர்களின் எண்ணங்கள் மிக விரைவுடையவாக இருக்கும்.

பொதுவாக நாம் எழுதுவதைவிட விரைவாகப் பேசுகின்றோம். பேசுவதைவிட மிக விரைவாக எண்ணுகின்றோம். நாம் ஒரு நிமை யத்திற்கு ஏறத்தாழ இருபத்தைந்து சொற்களையே எழுதுகின்றோம். பேசும் பொழுதோ ஒரு நிமையத்திற்கு நூறு சொற்களையே வெளிப் படுத்துகின்றோம். ஆனால் நாம் எண்ணுவதோ நிமையத்திற்கு 500 சொற்கள். இதைவிட அறிஞர்கள் விரைவாக எண்ணுகின்றனர். உயர்ந்த எண்ண ஆற்றல் உள்ள மெய்யுணர்வறிஞர்கள் ஒருநிமையத் தில் 700 முதல் 800 சொற்கள் வரை எண்ணுவதாக அறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர். O




5/188

# சினம்

**துரை-மாணிக்கம்**

சினத்தைப் பழகாதே தம்பி — நீ
சிறிதே என் பேச்சை உன்காதால் கேள் நம்பி! (சினத்தை)

மனத்தில் சினத்தை எண்ணுதே — உன்
மாண்பினை எப்போதும் இழக்க வொண்ணுதே! (சினத்தை)

கண்ணைச் சிவந்திட வைக்கும் — உனைக்
கண்ணிமைப் பொழுதில் குலைந்திட வைக்கும்;
மண்ணை இறைத்திட வைக்கும் — பெரும்
மானத்தை நொடியினில் இழந்திட வைக்கும்! (சினத்தை)

உன்னை மறந்திடச் செய்யும் — முன்
உள்ளதைத் தூக்கி அடித்திடச் செய்யும்;
அன்னைக்கும் தீங்கினைப் பண்ணும் — முன்
ஆரெதிர் வந்தாலும் அறைந்திடப் பண்ணும்! (சினத்தை)

சோற்றைக் கவிழ்த்திடச் செய்யும் — உளச்
சோர்வை எப் போதும் விளைந்திடச் செய்யும்;
கூற்றை வணங்கிடச் செய்யும் — பெருங்
கொலையாவும் எளிதில் புரிந்திடச் செய்யும்! (சினத்தை)

கடமை துறந்திடச் செய்யும்! – தீய
கயமைக்கே உன்னை வணங்கிடச் செய்யும்;
மடமை மிகுந்திட வைக்கும் – உன்
மகிழ்ச்சியை எப்போதும் விரட்டி உதைக்கும்! (சினத்தை)

ஏறிய வெஞ்சினம் கொள்வோன் – வாழ்வில்
ஏறுது தன்நிலை குலைந்திட மாள்வான்;
ஆறிய உள்ளத்தால் காண்பாய் – உன்னை
ஆட்கொண்ட கடுஞ்சினம் செய்திட்ட தீங்கை! (சினத்தை)

+766

# நல்லதும் கெட்டதும்

'குயில்'

ஆடும் மாடும் வீட்டிலே!
அடங்காப் புலிகள் காட்டிலே!
பாடும் குயில்கள் நாட்டிலே!
பயனில் ஆந்தை கூட்டிலே!

முல்லை கொல்லை மேட்டிலே!
முள்ளி கள்ளி காட்டிலே!
நல்ல பாடம் ஏட்டிலே!
நயமில் லாதவை கேட்டிலே!

வேம்பும் ஆலும் சோலையில்!
வேல மரங்கள் பாலையில்!
சோம்பல் இல்லார் வேலையில்!
சோம்பிக் கிடப்பார் மூலையில்!

நன்மை செய்வார் கருதியே!
நாளும் உயர்வார் உறுதியே!
புன்மை செய்வார் தாழ்விலே!
புகழைச் செய்வார் வாழ்விலே!

# “அரோன்வில்” நகரம்

பெயரைப் பார்த்தவுடன் இந்த நகரம் அமெரிக்காவிலோ இலண்டனிலோ இருக்கின்றது என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். வேறெங்கும் இல்லை. இந்த நகரம் தமிழ்நாட்டில் இனி அமைக்கப்போகும் நகரம்தான். இந்த நகரம் புதுவைக்கு அருகில் 1968-இல் அமையுமாம். அது 50000 பேர் குடியிருக்கக்கூடியதாக இருக்குமாம். அரவிந்தரின் நினைவாகக் கட்டப்போகும் இந்நகரத்திற்கு ‘அரோன்வில்’ என்று பெயரிடப்போகின்றார்களாம். எப்படி? “தமிழகத்தின் தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை” என்று புதுவைப் பாவலர் பாரதிதாசன் பாடினார் அன்றோ? நம் நாட்டு நிலை இன்னமும் கீழாகப் போய் விட்டது. தமிழ்த் தெருவில் தமிழ்மட்டுமா இல்லை; தமிழ்த்தெருவே இல்லை; தமிழ் ஊரே இல்லை. இன்னும் சில ஆண்டுகள் போனால் தமிழகமே இருக்காது.

# தொலைவரி

இப்பொழுதெல்லாம் கம்பிவழியாக அனுப்பப்படும் தொலைவரி (தந்தி) முறை, முதன்முதலில் 1844-இல் அமெரிக்காவில் கண்டு பிடிக்கப்பட்டது. இதனைக் கண்டுபிடித்தவர் சேமுவேல் பின்லே பிரீசு என்பவர். இவர் கண்டு பிடித்த செய்தி முறைக்கு ‘மோர்சு’ முறை எனப் பெயரிடப்பட்டது. இதன் வழியாக அந்த ஆண்டு மே மாதம் 24-ஆம் பக்கல் (தேதி) வாசிங்டனிலிருந்து பால்டிமோர் என்னும் நகரத்திற்கு முதன் முதலாகக், “கடவுள் என்ன செய்தார்?” என்ற சொற்களே அனுப்பப் பெற்றன.




அவனுக்கு அகவை (வயது) 7 இருக்கும். அவன் தந்தை ஒரு விறகு வெட்டி. அமெரிக்காவில் இண்டியானா பகுதியில் உள்ள காடுகளில் மரங்களை வெட்டிச் சாய்த்து அவற்றை நகருக்குக் கொண்டு வந்து விற்று வரும் பணத்தைக் கொண்டு ஒருவேளை உண்ணவே அவன் குடும்பம் தொல்லைப்பட்டது. இந்நிலையில் அவன் எப்படிப் படிப்பது?

பகல் முழுவதும் தந்தையுடன் வேலை. மாலை வீடு திரும்பியபின் தான் உணவு வேலை தொடங்கும். இரவு சாப்பிட நெடுநேரம் பிடிக்கும். அந்நிலையில் அவன் படிப்பது எங்கே? ஆனால் அவனுக்கோ படிக்கவேண்டும் என்று கொள்ளை ஆவல்.

பக்கத்தில் உள்ள சிற்றூரில் ஒரு பையனை அவனுக்குத் தெரியும். அப்பையன் சிறிய பள்ளி ஒன்றில் படித்துக்கொண்டு இருந்தான். அவனிடம் எப்படியாவது அவன் பொத்தகத்தைக் கேட்டுப் பெற்று-இரவல் வாங்கியாவது – படிக்க வேண்டும் என்ற எண்ணம் இவனுக்குத் தோன்றியது. தந்தையிடம் கேட்டான். "ஒவ்வொரு நாளும் மாலை வீடு திரும்பியபின் அதற்கு நேரத்தை ஒதுக்கு" என்றார். அதன்பின் தாயாரிடம் அவன் சென்றான். "அம்மா, நான் பகல் முழுதும் தந்தையுடன் காட்டுக்குப் போவேன்; மாலை வந்து 3 கற்கள் தொலைவில் உள்ள பக்கத்து ஊர்ப்பையனிடம் போய்ப் பொத்தகம்வாங்கிவருவேன். அதுவரை நீ அடுப்பு வேலைகளைச் செய்யாமல் இருக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

வீட்டில் வேறு வெளிச்சம் இல்லை. அடுப்பு வெளிச்சத்தில் எப்படியும் படித்து விடலாம் என்பது அவன் திட்டம். ஒவ்வொரு மாலையும் சிற்றூருக்கு அவன் போனான். அங்கிருந்த பையன் இரவு சாப்பிட்டுவிட்டுப் பொத்தகத்தைப் படித்துவிட்டுத் தூங்கப்போகும் வரைக்கும் அவன் காத்திருப்பான். பக்கத்திலிருந்து அப்பையன் படிப்பதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த இவன் அவன் தூங்கப்போனபின், அப்பொத்தகத்துடன் இரவில் மீண்டும் மூன்று கற்கள் நடந்து வீட்டிற்கு வருவான். அதன்பின் அடுப்புவேலை தொடங்கும். அந்த

அடுப்பு வெளிச்சத்தில் இவன் படிப்பான். மீண்டும் மறுநாள் காலை பொத்தகத்தைக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டுத் தந்தை காட்டுக்குப் புறப்படுமுன் ஓடோடி வருவான்.

அவனுக்குப் படிப்பில் அக்கறை இருந்தது; படிக்க வேண்டும் என்ற ஆவல் இருந்தது; விடாமுயற்சி இருந்தது; இவற்றுடன் ஒரு முறை படித்ததை நினைவில் வைத்துக் கொள்ளும் ஆற்றலும் அவனுக்கு இருந்தது. பக்கத்து ஊர்ப் பையனின் பாடப் பொத்தகம் படித்து முடிக்கப் பெற்றது. அவன்மேல் வைத்த அன்பால் யாரோ கிறித்துவ மறைநூலான 'பைபிளை' அவனுக்கு அன்பளிப்பாகத் தந்தனர். அதை இரவு பகல் கைகளிலேயே வைத்துக் கொண்டு திரிந்தான். எங்குச் சென்றாலும் அதை எடுத்துச் சென்றான். தூங்குகையில்கூட அந்தப் 'பைபிள்' அவன் நெஞ்சின் மீது கிடந்தது. தந்தை விறகு வெட்டிக் கொண்டிருக்கையில் பையன் ஏதாவது ஒரு மர நிழலில் அமர்ந்து அந்தப் பொத்தகத்தை விடாது படித்து வந்தான். அதன் பின் தந்தை வெட்டிய விறகுகளைக் கட்டத் துணை புரிவான்.

ஒருநாள் அவ்வாறு மர நிழலில் அமர்ந்து படித்துக்கொண்டிருக்கையில் அவனையறியாது அவன் தூங்கிவிட்டான். 'பைபிள்' அவன் கைகளிலேயே இருந்தது; ஆனால் எழுந்து பார்க்கையில் அஃது அவன் கைகளில் இல்லாமலிருந்தது. திடுக்கிட்டான்! ஆனால் அதை அவன் தந்தை தன் தலைக்கு வைத்தபடி பக்கத்து மர நிழலில் தூங்கிக்கொண்டிருந்ததைக் கண்டான்; வருந்தினான்.

அதன்பின் அவன் மெதுவாகத் தந்தையின் அருகில் சென்றான். தந்தையின் தூக்கத்தைக் கெடுப்பதற்கு அவன் விரும்பவில்லை. ஆனால் அப்பொத்தகத்தை அவர் தலைக்குத் தலையணையாக வைத்திருப்பதையும் அவன் விரும்பவில்லை. சிறிது நேரம் எண்ணி ஒரு முடிவுக்கு வந்தான். ஓசைப்படுத்தாமல் தந்தையின் தலைக்கருகில் அமர்ந்தான். பொத்தகத்தை ஒரு கையில் மெதுவாக எடுத்தவாறே தன் தொடையைத் தந்தையின் தலைக்கு அணையாக வைத்தான். அதன்பின் பொத்தகத்தை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டான். தந்தை களைப்பால் நெடுநேரம் தூங்கினார். அதுவரை அவன் அப்படியே அசையாது இருந்தான்.

தூக்கம் கலைந்தபின் தந்தை எழுந்தார். அவன் அன்பையும் அறிவையும் எண்ணி எண்ணி அந்த ஏழைத்தந்தை மகிழ்ந்தார். பையனைத் தொல்லைப்பட்டுச் சலியாது உழைத்துப் படிக்க வைத்தார். பையன் பெரியவன் ஆனான். பெரும் புகழ் பெற்றான். அமெரிக்காவையே ஆண்டான். அவன் யார் தெரியுமா? ஏழைகளின் அடிமை விலங்கொடித்த ஆபிரகாம் லிங்கன். முயன்று தோற்றவரும் இலர்; முயலாமல் வென்றவரும் இலர். இம் முதுமொழிக்கு ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கையும் ஒரு சான்றுதானே!



# குட்டிக்கதை

## ஒரு பொருளைக்கூடப் பார்க்க முடியவில்லையே !

ஓர் ஊரில் கிழவி ஒருத்தி இருந்தாள். அவளுக்குப் பார்வை மங்கிக் கொண்டு வந்தது. சில நாட்களில் இரண்டு கண்களும் குருடாகப் போயின. அவள் குருட்டுத்தனத்தைப் போக்குவதாக ஒரு மருத்துவன் கூறினான். அவன் அவ்வாறு அவளுக்குப் பார்வை வரும்படி செய்தால், அவள் அவனுக்கு நூறு உருபா தருவதாக உறுதி தந்தாள். அவனும் ஒப்புக்கொண்டு நாள்தோறும் அவளுக்கு மருத்துவம் செய்து வந்தான். ஆனால் அவன் அவள் வீட்டிற்கு வந்துபோகும் பொழுதெல்லாம், அவளுடைய வீட்டிலிருந்து ஏதாவது ஒரு பொருளை அவளுக்குத் தெரியாமல் எடுத்துப்போய்க் கொண்டே இருந்தான். முடிவில் அவளுக்குக் கண் பார்வை வந்தது. மருத்துவன் கிழவியிடம் தனக்குச் சேரவேண்டிய பணத்தைக் 'கொடு' என்று கேட்டான். அவளோ,தன் வீட்டிலுள்ள பொருள்கள் யாவும் களவாடப்பட்டிருப்பதைக் கண்டாள். அதனால் மருத்துவனுக்குக் கூறியபடி பணத்தைக் கொடுக்க மறுத்தாள்.

மருத்துவன் இந்த வழக்கை அவ்வூர்த் தலைவரிடம் போய் முறையிட்டான். ஊர்த்தலைவர் அந்தக் கிழவியைக் கூப்பிட்டுக் கேட்டார். கிழவி, "ஐயா, எனக்குக் கண்பார்வை வந்துவிட்டால், இம் மருத்துவனுக்கு நூறு உருபா கொடுப்பதாக ஒப்புக்கொண்டது உண்மையே! ஆனால் எனக்குப் பார்வை வந்துவிட்டதாக இம் மருத்துவன் சொல்கின்றான். நானோ இல்லை என்கின்றேன். மருத்துவம் பார்க்கத் தொடங்குமுன் என் வீட்டில் நிறைய பொருள்கள் இருந்தன. அவற்றை நான் பார்க்க முடிந்தது. ஆனால் இப்பொழுது அவற்றில் ஒரு பொருளைக்கூட நான் பார்க்க முடியவில்லையே!" என்று முறையிட்டாள். ஊர்த்தலைவர் உண்மையைப் புரிந்து கொண்டு மருத்துவனைக் கடுமையாகத் தண்டித்தார். அவன் திருடிச் சென்ற பொருள்கள் அனைத்தையும் வாங்கிக் கிழவிக்குக் கொடுத்தார். மருத்துவப் பணம் நூறு உருபாயைக் கூட மருத்துவன் இழந்தான். அவன் பொய்கூறியதால் அவனுக்கு உண்மையாகச் சேரவேண்டிய பயனைக்கூட அவன் அடையமுடியாமல் போனது.

# தெரிந்து கொள்ளுங்கள்

- உலகில் ஏறத்தாழ 10,000 வகை நெல் இனங்கள் பயிர் செய்யப் படுகின்றன.

- நிலவில் 1100, மலைகளும் 5,00,000 க்கு மேற்பட்ட எரிமலைகளும் உள்ளன வென்று கணக்கிட்டுள்ளனர். அங்குள்ள மலைகளுள் மிக உயர்ந்தது 24,000 அடி உயரமுள்ளது. எரி மலைகளுள் சில 150 கல் அகலமுடைய வாய்களை உடையன.

- இங்கிருந்து தெரியும் நிலவின் ஒளியை விட, அங்கிருந்து பார்க்கையில் நாம் வாழும் இவ்வுலகின் ஒளியே மிகுந்ததாக இருக்கும். பிறை நிலவுக் காலத்தில் அதன் எஞ்சிய பகுதி உலகத்தின் ஒளியினாலேயே நமக்கு மங்கலாகத் தெரியும். நமக்குக் காருவா (அமாவாசை) க்காலம் நிலவில் இருந்து இவ்வுலகத்தைப் பார்ப்போருக்கு முழு ஒளியுடைய வெள்ளுவாக்(பௌர்ணமி)காலமாகும்!


- இம் மண்ணுலகம் தோன்றி ஏறத்தாழ 200 கோடி ஆண்டுகள் ஆகின்றன என்று அறிவியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

- நாம் வாழும் இவ்வுலக உருண்டை வானவெளியில் ஒரு மணிக்கு 555 கற்கள் (மைல்கள்) விரைவில் உருண்டு ஓடிக்கொண்டிருக்கிறது.

- இப்பொழுதைய இந்தியாவில் 3 நொடிகளுக்குள் (ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணுவதற்குள்) ஒரு குழந்தை பிறக்கின்றது. ஒரு நிமையத்திற்கு 20 குழந்தைகள் பிறக்கின்றன. (அஃதாவது இந்தச் செய்தியை நீங்கள் படித்து முடித்த இந்நேரத்தில் 5 குழந்தைகள் பிறந்திருக்கும்!)

- பொதுவாக நாம் தூங்கும்பொழுது ஏறத்தாழ 36 முறைகள் அசைந்து அசைந்து மாறி மாறிப் படுப்பதாக அறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர்.

- உருளைக் கிழங்கை விடச் சருக்கரை வள்ளிக்கிழங்கில் உணவுச் சாரம் மிகுந்திருக்கின்றது.




சென்ற மாதம் வெளிவந்த புதிர் 1-இன் விடை:

வாங்கிய நொறுவைகள்: 7. வட்டமானதின் விலை: 4 காசு.
சதுரமானதின் விலை: 6 காசு.

புதிர் 2-இன் விடை: முத்து எடுத்துச்சென்ற பூக்கள் – 7.

இம்மாதப் புதிர்களைப் போட்டிருப்பவர் இருவரும் தங்கைகளே.

## புதிர்: 1.

ஒரு கூடையில் பல மாம்பழங்கள் இருக்கின்றன. அவற்றை ஏழு ஏழாகப் பகிர்ந்தால் மீதி ஆறு வருகின்றது. ஆறு ஆறாகப் பிரித்தால் ஐந்து மீதி ஆகும். ஐந்து ஐந்தாகப் பிரித்தால் நான்கு மீதி ஆகும். நான்கு நான்காகப் பிரித்தால் மூன்று மீதி ஆகும். மூன்று மூன்றாகப் பிரித்தால் இரண்டு மீதி ஆகும். இரண்டு இரண்டாகப் பிரித்தால் ஒன்று மீதி ஆகும். அப்படியானால் கூடையில் இருக்கும் பழங்கள் எத்தனை?

இப்புதிரைப் போட்டிருக்கும் தங்கை: சு. கிரிசா, 5-ஆம் வகுப்பு
நம்பியூர் ஊராட்சி ஒன்றிப்பு உயர்தொடக்கப்பள்ளி,
புன்செய் புளியம்பட்டி, ஈரோடு வழி.

## புதிர்: 2.

ஒரு வீட்டிற்கு 21 விருந்தினர் வந்திருந்தனர். அந்த வீட்டில் உள்ள தலைவி 21 அப்பம் சுட்டு வைத்திருந்தாள். விருந்தினர்களின் குழந்தைகளுக்கு ஆளுக்கு அரை அப்பமும், பெண்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் அப்பமும், ஆண்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டிரண்டு அப்பங்களும் படைக்கப்பட்டன. அவ்வாறானால் அவ்வீட்டிற்கு வந்தவர்களில் எத்தனைக் குழந்தைகள், எத்தனைப் பெண்கள்? எத்தனை ஆண்கள்?

இப்புதிரைப் போட்டிருக்கும் தங்கை: அ. சங்கரவேணி.
பத்தாம் நிலை, தொண்டு நிலையம், பெங்களூர்-21.

இவ்விரண்டு புதிர்களின் விடைகளையும் அடுத்த இதழில் பாருங்கள்.




O ‘தமிழ்ச்சிட்டு’ என்ற இம்மலர் மொட்டு மலர்ந்து மணம்வீச இன்னும் பல புதிய முறைகள் புகுத்தப்பட வேண்டும் ... காசுக்காக- கவர்ச்சிக்காகப் பெண்மையின் தூய்மையை மாசு படுத்தி நெஞ்சில் அருவருப்பான உணர்வுகளைத் தூண்டும் வகையில் முகப்புப் படம் போடும் இன்றைய இழிதகையாளர்களை நம் இனம் என்று கூறுதற்கும் நா கூசுகின்றது. அவ்வாறின்றித் தமக்கென வாழாது நம் நாடு, நம் பண்பாடு, நம் நாகரிகம் முதலியவற்றிற்காகவே வாழ்ந்து உழைத்து மறைந்த நம்நாட்டுத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளை வெளியிடுவதுடன், அவர்களின் உருவங்களைத் தமிழ்ச்சிட்டின் முகப்பில் வெளியிடவும் வேண்டுகின்றேன்.

வே. ரா. தாசன். தில்லை.

(தமிழ்ச்சிட்டிலோ, ‘தென்மொழியிலோ வாழ்க்கை வரலாறுகளாகவோ, படங்களாகவோ வெளியிடும் அளவிற்குத் தமிழ்நாட்டில் தந்நலமற்ற பொதுமைத் தொண்டர்களோ தலைவர்களோ ஒருவரும் முழுமையடையவில்லை என்றே கருதுகின்றோம். தொடர்ந்து ஓராண்டிற்கு (12 இதழ்களில்) போடும் அளவிற்கும் 12 முழுத் தொண்டர்களைக் கூடத் தமிழகம் இன்னும் விளைவிக்கவில்லை. அரைகுறைகளே மிகுதி! தகுதிபெற்ற ஓரிருவரைப் பற்றிப் பின்னர் வெளியிடுவோம். — ஆசிரியர்)

O. நகர்ப்புறங்களிலும் சிற்றூர்களிலும் ஆங்காங்குள்ள தமிழ் அன்பர்க்கு உண்மைத் தமிழுணர்வின் உரம் ஏற்றிய பெருமை ‘தென்மொழி’யைச் சாரும். நூற்றுக்கணக்கான மறைந்துவரும் தனித் தமிழ்ச் சொற்களை (கட்டுரைகளில் கையாளுவதன்மூலம்) வழக்குக்குக் கொண்டு வந்த ‘தென்மொழி’யின் தொண்டு சொல்லுந்தரமன்று. தமிழ்மொழிக்கென உள்ள எண்வரிசையைத் தென்மொழியில் பயன்படுத்திய தாங்கள், ‘தமிழ்ச்சிட்டு’ இதழில் பக்கங்களை ‘உலகப் பொது எண்களில்’ பயன்படுத்துகின்றீர்கள் என்பதை நினைப்பூட்டுகின்றோம். இனிவரும் இதழ்கள் ‘தமிழ் எண்’ தாங்கி வருமென நம்புகின்றோம்.

நாஞ்சில். செ. சுந்தரராசன். அறி. இ. பங்களூர்-12.

(இளவுள்ளங்களை முறையாக-படிப்படியாகத் தனித்தமிழ்மேல் ஈடுபாடு கொள்ளச் செய்யவேண்டும். விரைவு காட்டுவது நன்றன்று. அதுவே பெரும்பயன் தரும். நீங்கள் எதிர்பார்க்கும் அத்தனை மாற்றங்களையும் நாளடைவில் தமிழ்ச்சிட்டில் பார்க்கலாம். உங்கள் அன்பிற்கு நன்றி. — ஆசிரியர்)

## மாணவர்க்கான மணி மொழிகள்

தமிழ்ச்சிட்டுகளே,

- உங்கள் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வொரு திறமையோ ஆற்றலோ மறைந்து கிடக்கின்றது. அதனை மலரச்செய்வதே வாழ்க்கை என அறிந்து கொள்ளுங்கள்.
- ஒழுக்கம் உயிரினும் மேலானது. ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் தவறாமல் கடைப்பிடியுங்கள்.
- நூல் நிலையங்கட்குச் சென்று சிறந்த அறிவு நூல்களையும் நல்ல செய்தித்தாள்களையும் படிப்பதை வழக்கமாகக் கொள்ளுங்கள்.
- பெரியோர்களின் வாழ்க்கைக் கதைகளைப் படித்து அவர்களைப் போல் நீங்களும் சிறந்தவர்களாக முயற்சி செய்யுங்கள்.
- நல்லுணர்வையும் பண்பாட்டையும் கெடுக்கக்கூடிய திரைப் படங்களில் வீணுக மயங்கி உங்களையே கெடுத்துக் கொள்ளாதீர்கள்.
- எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிருங்கள். உங்கள் மகிழ்ச்சிக்காக அவற்றுக்கு ஊறு விளைவிக்காதீர்கள்.
- பிறருக்கு உங்களால் இயன்ற அளவு நன்மை செய்தல் வேண்டும் என்பதைக் கட்டாயமாகக் கொள்ளுங்கள்.
- உங்கள் பெற்றோரிடத்தும் பெரியோரிடத்தும் பணிவுடனும் இன்சொல்லுடனும் நடந்து கொள்ளுங்கள்.
- சோலைகளிலும் காடுகளிலும் திரிந்து இயற்கை அழகைச் சுவைப்பதிலும், இயற்கைப் பொருள்களோடு உறவாடுவதிலும் இன்பம் காணுங்கள்.
- இறுதியாக, உங்கள் தாய் மொழியாகிய தமிழும், தாயகமாகிய தமிழகமும் இருவிழிகள் எனக்கொண்டு அவற்றுக்கு இயன்ற அளவு பணிபுரியுங்கள்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.